தமிழ்நாடு மின் துறை பொறியாளர் அமைப்பு
Tamilnadu Power Engineers Organisation
Regd. No : 2998/CNI
Under Indian Trade Union Act, 1926
Afiliated : COTEE - EEFI
27, Mosque Street, Chepauk, Chennai - 600 005. Ph : 28548529, 28515038 Fax : 28516574 Web : www.tnpeo.org e-mail : tnpeogs@gmail.com
R.Sridhar Honorary President | T.Arivazhagan President | K.Arulselvan General Secretary | K.Jeevanandham Treasurer

அன்பார்ந்த,

மின்வாரிய அப்பரண்டீஸ் தோழர்களே!

வணக்கம். அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் ............

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள காலியிடங்களை நிரப்பிட வேண்டும் என்று தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பும், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பும் தொடர்ச்சியாக முயற்சி எடுத்தது. இதன் காரணமாக மின்வாரியம் உதவிப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், கள உதவியாளர் உள்ளிட்ட இதர பதவிகளிலும் உள்ள ஒரு பகுதி காலியிடங்களை நிரப்பிட 2015–16 –ல் அறிவிப்பை செய்தது. இந்த பணிநியமன அறிவிப்பில் மின்வாரியம் அப்பரண்டீஸ்களுக்கு நியாயமாக, சட்ட ரீதியாக வழங்க வேண்டிய உரிமைகளை வழங்காமல், நமது முறையீடுகளை நிராகரித்துவிட்டு நேர்காணலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்த சூழலில், நமது TNPEO சார்பாக அப்பரண்டீஸ்களின் உரிமையை பெற்றிட சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்றம் உதவிப் பொறியாளர் எழுத்து தேர்வு முடிவுகளை மின் வாரியம் வெளியிடக்கூடாது என தடை விதித்து உத்திரவிட்டது. இதை தொடர்ந்து தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் கள உதவியாளர் பதவிகளின் எழுத்து தேர்வு முடிவுகளையும் மின் வாரியம் வெளியிடக்கூடாது என தனித்தனியாக அப்பரண்டீஸ்கள் சார்பாக TNPEO வழக்கு தொடர்ந்ததில் சென்னை உயர் நீதிமன்றம் தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கள உதவிகள் பதவிகளுக்கான எழுத்து தேர்வு முடிவுகளையும் மின் வாரியம் வெளியிடக்கூடாது என தனித்தனியாக தடை விதித்து உத்திரவிட்டுள்ளது.

மின்வாரியம் மேற்கண்ட தடைகளை நீக்கிட இரண்டு முறை நீதிமன்றத்தில் வாதம் செய்து தோல்வியடைந்தது. மேலும் வாரியம் மூன்றாவது முறையாக உதவிப் பொயிளாள் வழக்கில் நீதிமன்ற தடையை நீக்கிட எடுத்த முயற்சியால், சென்னை உயர் நீதிமன்றம் எழுத்து தேர்வு முடிவுகளை மட்டும் மின்வாரியம் வெளியிடலாம் என தெரிவித்து நேர்காணல் நடத்திட கூடாது என மீண்டும் தடை விதித்து உத்திரவிட்டது.

இந்த சூழ்நிலையில் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்த போது TNPEO அப்பரண்டீஸ்கள் சார்பாக தற்போதைய தமிழக அரசின் மூத்ததலைமை வழக்கறிஞராக உள்ள திரு.முத்துகுமாரசாமி அவர்கள் வாதாடினார்கள். இந்திய இரயில்வே துறை 2014 ம் ஆண்டு அப்பரண்டீஸ் சட்ட திருத்தத்தை அமுல்படுத்தும் விதமாக 20 சதவீத பணியிடங்களை அப்ரண்டீஸ்களுக்கு ஒதுக்கி உத்திரவிட்டதை போல மின்வாரியமும் அப்பரண்டீஸ்களுக்கு குறித்து கொள்கை ரீதியாக முடிவு எடுத்திடும் படியான பரிந்துரையை இடைக்கால உத்தரவாக வழங்கியது. இந்நிலையில் சென்னையில் நாம் நடத்திய தர்ணா மிக சிறப்பாக அமைந்தது, அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஆனால், வாரியம் எவ்வித கொள்கை முடிவும் எடுக்காமல் வழக்கை மீண்டும் எதிர்கொண்டது. தற்போது வழக்கின் இறுதிகட்ட விசாரணை நடைபெற்றுக்கொண்டு உள்ளது. நமது தரப்பு வாதங்கள் முழுமையாக முடிவடைந்துள்ளது. நமது தரப்பில் மூத்த வழக்கறிஞர் தோழர்.வைகை அவர்கள் சிறப்பான வாதங்களை முன்வைத்துள்ளார். மின்வாரியமும் தனது வாதங்களை முழுமையாக செய்து முடித்துள்ளது. இந்த வழக்கில் இணைந்துள்ள சிலரின் வாதங்கள் மட்டுமே இறுதியாக நடைபெற வாய்புள்ளது.

நமது இயக்கத்தையும், கோரிக்கைகளையும், மேலும் பலப்படுத்திட வழக்கில் இணைந்து வழக்கு மற்றும் போராட்ட நிதி, இதுவரை அளிக்காத தோழர்கள் உடனடியாக ரூ.2000/– செலுத்திட வேண்டும். வங்கி கணக்கில் பணத்தை செலுத்திய தோழர்கள் அதற்கான வங்கி சலான் நகலை கீழ்கண்ட தேதிகளில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்கும் போது அளித்திட கேட்டுக் கொள்கிறோம். மேலும் நமது 2016 –ம் ஆண்டுக்கான சங்க உறுப்பினர் பதிவை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் அனைவரும் கூட்டத்திற்கு வரும்போது ரூ.250/– செலுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

வழக்கின் தீர்பினை விரைந்து பெறுவதற்கும், தீர்ப்புக்கு பிறகு நாம் அடுத்து செய்ய போவதற்கும், குறிப்பிட்டுள்ள தேதியில் ஏதாவது ஒரு இடத்தில் அனைத்து அப்பரண்டீஸ்களோ அல்லது அவர்களின் உறவினர் யாரேனும் ஒருவர் கண்டிப்பாக பங்கேற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். இதுவரை வழக்கில் இணையாத BE, DIPLOMA, ITI அப்பரண்டீஸ்கள் தங்களின் நண்பர்களா இருந்தால் அவர்களையும் கீழ்கண்ட கூடடங்களில் பங்கேற்க்க வைத்து, அப்பரண்டீஸ்களின் கோரிக்கைகள் வெற்றியடைய மிகுந்த ஒற்றுமையுடன் செயல்பட்டு நமது இயக்கத்தை பலப்படுத்திட கேட்டுக் கொள்கிறோம்.

| நாள்/ நேரம் | நடைபெறும் இடத்தின் முகவரி |
|---|---|
| 5.1.2017 வியாழன்– மாலை 4.00 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், மின்வாரிய தலைமை அலுவலகம், ( கேண்டீன் எதிரில்) 144, அண்ணா சாலை, சென்னை – 600 002. |
| 6.1.2017 வெள்ளி – மாலை 5.00 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், நெ.9, பவானி தெரு, உலகமணிதிருமணமண்டபம்அருகில், விழுப்புரம், |
| 7.1.2017 சனி – காலை 10.30 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், நெ.41, திடீர் நகர், பெரியார் பஸ் நிலையம் அருகில்,மதுரை–1. |
| 7.1.2017 சனி – மாலை 4.30 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், அனந்தநம்பியார் நகர், கரூர்–பைபாஸ் ரோடு, சத்திரம் பஸ் நிலையம் அருகில், திருச்சி –3. |
| 8.1.2017 ஞாயிறு – காலை 10.30 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், நெ.1ஏ., புதுப்பேட்டை மெயின் ரோடு, திருப்பத்துார், வேலுார் மாவட்டம்–635 601. |
| 8.1.2017 ஞாயிறு – மாலை 4.00 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், சின்னேரி வயல், சினிமா நகர், புது பஸ் நிலையம், அருகில்,சேலம் 639409. |
| 10.1.2017 செவ்வாய் – மாலை 4.30 மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், சிவந்திப்பட்டி ரோடு, மகாராஜா புரம், மின்வாரிய தலைமை அலுவலகம் அருகில், திருநெல்வேலி 627 011. |
| 11.1.2017 புதன் – மாலை 4.30. மணி | சி.ஐ.டி.யூ அலுவலகம், கணபதி நகர், டெக்ஸ்டுல் பஸ் நிலையம் அருகில், கோயம்புத்துார். |

உங்களது ஒவ்வொருவரது பங்களிப்பும், பங்கேற்பும் நமது கோரிக்கைகளை வெற்றி கொள்வதற்கும், இயக்க நடவடிக்கைகளை வேகப்படுத்துவதற்கு இந்த காலகட்டத்தில் தேவையான ஒன்று என்பதால் அனைவரும் மற்ற வேலைகளை தள்ளிவைத்துவிட்டு கூட்டங்களில் பங்கேற்றிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
தோழமையுடன்



கே.அருள்செல்வன்,
பொதுச் செயலாளர்/TNPEO